# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.02/2022** **நாள் : 03.03.2022**

**<u>சென்னைக் குடிநீர் வாரியத்தின் அண்ணா பூங்கா நீரேற்று நிலையத்தில்</u>**
**<u>பிரதான குழாயின் தரத்தை பரிசோதிக்கும் பணிகள் மேற்கொள்வதால்</u>**
**<u>பகுதி–5க்கு உட்பட்ட பகுதிகளில்</u>**
**<u>04.03.2022 அன்று காலை 09.00 மணி முதல் 05.03.2022 அன்று</u>**
**<u>காலை 08.00 மணி வரை</u>**
**<u>குடிநீர் விநியோகம் நிறுத்தம்</u>**

**<u>சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்</u>**

சென்னை குடிநீர் வாரியத்தால் அண்ணா பூங்கா நீரேற்று நிலையத்தில் குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாயின் தரத்தை பரிசோதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், இராயபுரம், பழைய வண்ணாரப்பேட்டை, கொருக்குப்பேட்டை மற்றும் காசிமேடு ஆகிய பகுதிகளுக்கு 04.03.2022 அன்று காலை 09.00 மணி முதல் 05.03.2022 அன்று காலை 08.00 மணி வரை குழாய் மூலமாக வழங்கும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

இதனால், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், அவசர தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள கீழ்க்காணும் அலுவலரை தொடர்பு கொள்ளவும்.

பகுதிப் பொறியாளர் / பகுதி-5 - கைபேசி எண்.8144930905

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைக் குடிநீர் வாரியம்